# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

ல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூ | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துகளும்

**த.நர்மதா தேவி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**"ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் முரியாமல் வாழும்"**

இத்தகைய தகைமை பெற்றது நம் மொழி அதனால் தான் என்றும் உள தென்தமிழ் என்று கம்பர் போற்றுகின்றார்.

**புறநானூற்றின் தனிச்சிறப்பு**

கடவுள் வாழ்த்து உட்பட 400 பாடல்களைக் கொண்ட தொகை நூலாகிய புறநானூற்றினைப் புறம் என்றும் புறப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் பலவும் ஆசிரியமாகவும் ஒரு சில வஞ்சியாப்பினவாகவும் அமைந்துள்ளன.

ஆங்கில நாட்டுத் தமிழ் ஆர்வலர் ஜி.யு.போப் அவர்களைக் கவர்ந்த இலக்கியத்தில் புறநானூறும் சிறப்பிடம் பெற்றது. அவர் தம் நெஞ்சினைக் கவர்ந்த 71 பாடல்களை ஆங்கிலத்தில் கவிதை வடிவத்தில் அழகாக மொழிபெயர்ந்து வெளியிட்டிருத்தல் அறியத்தக்கது.

இலக்கியம் என்பது சிறந்த சிந்தனைகளின் பதிவேடு (Literature is a record of the best thoughts) என்ற எமர்சன் என்ற விமர்சகர் கூறும் கொள்கைக்குச் சிறந்த இலக்கியமாகப் புறநானூறு திகழ்கிறது.

**கொடைத்திறம்**

அக்கால மக்கள் வாழ்க்கையில் சிறப்பாய்ச் சொல்லத்தக்க பண்புகள் இரண்டு அவை வீரம், கொடை என்பன தமிழர் இயல்புகளிலே வீரத்துக்கு அடுத்த முதன்மையுடையது கொடைத்திறம்.

பண்டைத் தமிழ் மன்னரும் வள்ளல்களும், கொடுப்பதையே ஓர் அருங்கலையாகப் போற்றி வந்திருக்கிறார்கள்.

**"ஈ என இரத்தல் இழித்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று" (புறம்.204)**

எனக்குக் கொடுத்திடு என்ற இரத்தல் இழிந்தது, அவ்வாறு கேட்டார்க்குக் கொடுக்கமாட்டேன் எனக் கூறி மறுத்தல் அவ்விரத்தலை விட இழிந்தது.

ஒருவன் இரப்பதற்கு முன்பாகவே அவன் குறிப்பை முகத்திலிருந்து அறிந்து கொண்டு இதனைக் கொள்க எனக் கொடுத்தல் உயர்ந்தது.

**"இல்லது நோக்கி, இனிவரவு கூறாமுன்**
**நல்லது வெ'.கி, வினை செய்வார்" (பரி.10; 87-88)**

சிலர் இல்லாமையால் வாடுவோர் நிலையினை அவரைப் பார்த்த அளவில் உணர்ந்து கொண்டு, அவர் தம்மை நோக்கி இரந்து வேண்டுவதற்கு முன்பே அறத்தினை விரும்பி நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இரப்பார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தனர்.

**செல்வத்துப் பயனே ஈதல்**

செல்வத்தின் பயனே பிறர்க்கே கொடுத்து உதவுதல் ஆகும் என்பதை,

**"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;**
**செல்வத்துப் பயனே ஈதல்" (புறம்.189)**

உலக நிலைகளில் வேறுபடும் வேந்தனின் உயர்வும் வேடனின் தாழ்வும் உணவு உடைகளில் ஒன்றாகின்றது. இவ்வாறு செல்வத் துய்ப்பாகிய பண்பாடு எல்லோர்க்கும் ஒத்திருந்தலால் செல்வத்தை மிகுதியாகப் படைத்தோர் படையாதோர். கொடையாகக் கொடுத்தலே அதன் பயனை அறிந்த பண்பாகும். ஆதலால் செல்வத்துப் பயனே ஈதல் என்பர்.

**சேரமான் செல்வக்கடுங்கோ கொடைத் தன்மை**

"பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும், குரிசில்
வலிய ஆகும்நின் தாள்தோய் தடக்கை" (புறம்.14)

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் பரிசிலர்க்கு பெறுதற்கரிய அணிகலன்களை அள்ளிக்கொடுக்கிறார்.

**வேள்ஆய் அண்டிரன் கொடைச்சிறப்பு**

தன்னையும் தன்மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு ஆய்அண்டிரன் பலப் பல யானைகளைப் பரிசிலாக வழங்குதலால், அவனாட்டுப் பெண் யானைகள் ஒரு கருவில் பத்துக் கன்றுகளை ஈனுமோ என புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

"விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்! நின்நாட்டு
இளம்பிடி ஒருசூம் பத்துஎனும் மோ?"

கொடைத்தன்மையினை உவமித்து காட்டியுள்ளார்.

**சேரமான் குட்டுவன் கோதை கொடைத்தன்மை**

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரன் அவர்கள் சேரமான் குட்டுவன் கோதையின் கொடைத்தன்மையினை,

"எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மை யல்லது புரவெதிர்ந்து

**வானம் நாண், வரையாது..." (புறம்.54)**

கொடைகளிலே சிறந்த வள்ளல் தன்மையாக நிகழப்படும் வானமே நாணும்படி இரவலர்க்கு எளியவனாக கொடைத் தன்மையை புரிகின்றான்.

**பாரியின் கொடைத்தன்மை**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரி, வள்ளல் தன்மையில் மாரியைப் போல கைம்மாறு கருதாமல்,

**"மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன், பாரி கை வண்மையே" (புறம்.106)**

பரிசில் வேண்டி வருவோர் அனைவருக்கும் வாரி வழங்கும் கடமையுடையவன் பாரி.

**"பாரி பாரி என்றுபல ஏத்தி**

**------------------------------**

**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே" (புறம்.107)**

பாரி பாரியென்று சொல்லி, அவனுடைய பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்கின்றனர். இங்கே உலகினைப் பாதுகாப்பதற்குப் பாரி ஒருவனே அல்லன் மாரியும் உண்டு என இயன் மொழியாக பாரி சிறப்பு உணர்த்தப் படுகின்றார் கபிலர்.

**உணவு அளித்தல்**

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

கொடைகளில் சிறந்தன்வாக நிகழப்படுவன உணவு ஆகும். பழமொழியில் கூட 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' எனவும் கூறப்படுகின்றன. உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்க்கு சமமாகும்.

**சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் பெயர்ச்சிறப்பு**

பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையில் நடந்த பாரதப்போரில் இருபடைகளுக்கும் சேரன் பெருஞ்சோறு வழங்கிய செய்தியினை

"ஈர்ஐம் பதின்மரும் பொருதுகளத்து ஒழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"
(புறம்.2;15-16)

மேற்கண்ட அடிகளின் மூலம் சேரன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் கொடைத்தன்மையினை அறிய முடிகின்றது. மேலும் இதே கருத்தை சிலப்பதிகாரமும்,

"ஓர் ஐவர் ஈரைம் பதின்மர் உடன் றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த

ஒருவன் இரப்பதற்கு முன்பாகவே அவன் குறிப்பை முகத்திலிருந்து அறிந்து கொண்டு இதனைக் கொள்க எனக் கொடுத்தல் உயர்ந்தது.

"இல்லது நோக்கி, இனிவரவு கூறாமுன்
நல்லது வெ'.கி, வினை செய்வார்" (பரி.10; 87-88)

சிலர் இல்லாமையால் வாடுவோர் நிலையினை அவரைப் பார்த்த அளவில் உணர்ந்து கொண்டு, அவர் தம்மை நோக்கி இரந்து வேண்டுவதற்கு முன்பே அறத்தினை விரும்பி நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இரப்பார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தனர்.

**செல்வத்துப் பயனே ஈதல்**

செல்வத்தின் பயனே பிறர்க்கே கொடுத்து உதவுதல் ஆகும் என்பதை,

"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்" (புறம்.189)

உலக நிலைகளில் வேறுபடும் வேந்தனின் உயர்வும் வேடனின் தாழ்வும் உணவு உடைகளில் ஒன்றாகின்றது. இவ்வாறு செல்வத் துய்ப்பாகிய பண்பாடு எல்லோர்க்கும் ஒத்திருந்தலால் செல்வத்தை மிகுதியாகப் படைத்தோர் படையாதோர். கொடையாகக் கொடுத்தலே அதன் பயனை அறிந்த பண்பாகும். ஆதலால் செல்வத்துப் பயனே ஈதல் என்பர்.

**சேரமான் செல்வக்கடுங்கோ கொடைத் தன்மை**

"பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும், குரிசில்
வலிய ஆகும்நின் தாள்தோய் தடக்கை" (புறம்.14)

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் பரிசிலர்க்கு பெறுதற்கரிய அணிகலன்களை அள்ளிக்கொடுக்கிறார்.

**வேள்ஆய் அண்டிரன் கொடைச்சிறப்பு**

தன்னையும் தன்மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு ஆய்அண்டிரன் பலப் பல யானைகளைப் பரிசிலாக வழங்குதலால், அவனாட்டுப் பெண் யானைகள் ஒரு கருவில் பத்துக் கன்றுகளை ஈனுமோ என புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

"விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்! நின்நாட்டு
இளம்பிடி ஒருசூல் பத்துஈனும் மோ?"

கொடைத்தன்மையினை உவமித்து காட்டியுள்ளார்.

**சேரமான் குட்டுவன் கோதை கொடைத்தன்மை**

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரன் அவர்கள் சேரமான் குட்டுவன் கோதையின் கொடைத்தன்மையினை,

"எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மை யல்லது புரவெதிர்ந்து

வானம் நாண, வரையாது..." (புறம்.54)

கொடைகளிலே சிறந்த வள்ளல் தன்மையாக நிகழ்படும் வானமே நாணும்படி இரவலர்க்கு எளியவனாக கொடைத் தன்மையை புரிகின்றான்.

**பாரியின் கொடைத்தன்மை**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரி, வள்ளல் தன்மையில் மாரியைப் போல கைம்மாறு கருதாமல்,

"மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன், பாரி கை வண்மையே" (புறம்.106)

பரிசில் வேண்டி வருவோர் அனைவருக்கும் வாரி வழங்கும் கடமையுடையவன் பாரி.

"பாரி பாரி என்றுபல ஏத்தி
------------------------------
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே" (புறம்.107)

பாரி பாரியென்று சொல்லி, அவனுடைய பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்கின்றனர். இங்கே உலகினைப் பாதுகாப்பதற்குப் பாரி ஒருவனே அல்லன் மாரியும் உண்டு என இயன் மொழியாக பாரி சிறப்பு உணர்த்தப் படுகின்றார் கபிலர்.

**உணவு அளித்தல்**

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

கொடைகளில் சிறந்தன்வாக நிகழப்படுவன உணவு ஆகும். பழமொழியில் கூட 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' எனவும் கூறப்படுகின்றன. உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்க்கு சமமாகும்.

**சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் பெயர்ச்சிறப்பு**

பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையில் நடந்த பாரதப்போரில் இருபடைகளுக்கும் சேரன் பெருஞ்சோறு வழங்கிய செய்தியினை

"ஈர்ஐம் பதின்மரும் பொருதுகளத்து ஒழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"
(புறம்.2;15-16)

மேற்கண்ட அடிகளின் மூலம் சேரன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் கொடைத்தன்மையினை அறிய முடிகின்றது. மேலும் இதே கருத்தை சிலப்பதிகாரமும்,

"ஓர் ஐவர் ஈரைம் பதின்மர் உடன் றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த

**சேரன், பொறையன், மலையன்" (சிலம்பு.29;25-27)**

இவ்வாறு பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது வழங்கிய சிறப்பினால் இச்சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனப் பெயர் பெற்றான்.

**அறக்கருத்துக்கள்**

தமிழில் தோன்றிய நூல்கள் பெரும்பாலும் அறத்தையே முதன்மைப்படுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறக்கருத்தை வலியுறுத்துகின்றன.

நீதி நூல்களில் முதன்மையாக விளங்கப்படுவன திருக்குறளில் அறம், பொருள், இன்பம் மூன்று பெரும் பிரிவுகளில் அறத்தையே திருவள்ளுவர் முதன்மை நிலையில் வைத்து போற்றப்படுகின்றார்.

**செய்ந்நன்றி மறவாமை பற்றி**

**"நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம் பாடின்றே ஆயிழை கணவ" (புறம்.34)**

நிலவுலகம் தலைகீழாகும் காலமாயினும் ஒருவன் செய்த நன்றியை மறந்தல் மறுமையின்பமும் இன்றி நரகமும் புகுவேன் என உணர்த்துகின்றது இதே கருத்தை திருக்குறளும்,

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள்.110)**

எவ்விதமாக அறத்தை அழித்தவர்க்கும் தப்பிக்க வழி உண்டாகும். ஆனால் ஒருவர் செய்த நன்றியைக் கொன்றவர்க்குத் தப்பிக்க வழியே உண்டாகாது.

**வாழ்வியல் விழுமியங்கள்**

வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் புறநானூறு வாழ்வியல் உண்மைகளையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

**"யாதும் ஊரே; யாரும் கேளிர்" (192)**

ஓர் ஊரே ஊரென்றும் ஒருசிலரே உறவினரென்றும் கருதுகின்ற குறுகிய மனப்பான்மைக்கு மாறாக அனைத்து ஊர்களும் ஒன்றே. அனைத்து மக்களும் உறவினரே என்ற ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றது. இதே கருத்தை,

**"யாதானும்நாடு ஆமால், ஊர்ஆமால், என் - ஒருவன்**
**சாம்துணையும் கல்லதாவாறு" (குறள்.397)**

கல்வி முதலிய சிறப்புக்களால் ஒருவர்க்கு யாதும் நாடாகும். ஊராகும், யாவரும் உறவினராவர்.

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம்.192)**

ஒருவருக்கு நல்வினைக்கும், தீவினைக்கும் அவரவரே காரணம் என்பதை உணர்த்துகின்றது. இதே கருத்தை,

**"பெருமைக்கும், ஏனைச்சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்" (குறள்.505)**

ஒருவருடைய பெருமையையும், சிறுமையான பழியையும் அளவிட்டு அறியும் உரைகல்லாக இருப்பது அவரின் செயல்களே ஆகும்.

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமுன்; அதுதான்" (புறம்.95)**

உலகில் யாருக்காயினும் நம்மால் இயன்ற அளவு நம்மை செய்தல் வேண்டும். அவ்வாறு நன்மை செய்ய இயலாதாயினும் எவருக்கும் தீமை செய்வதைத் தவர்க்க வேண்டும்.

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**

**"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"**

உலகிற்குத் தானே உயிரென்பதை அறிந்து அதற்கேற்ப அரசாளுதல் வேந்தனுக்குக் கடமையாகும். இதே கருத்தை,

**"நெல்உயிர் மாந்தர்க் கெல்லாம் நீர்உயிர்; இரண்டும் செப்பின்**
**புல்லுயிர்; புகைந்து பொங்கும் முழங்கழல் இலங்கு வாட்கை**
**மல்லலம் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்**
**நல்லுயிர் ஞாலம் நன்னுள்; நாமவேம் நம்பி என்றான்"**
**(சீவக.2908)**

உலகிற்கு உணவாகி உயிர்ப்பூட்டுவன நெல்லும் நீரும் அவையும் உயிர்போல்வன; ஆயினும், மன்னன் முறைசெய்து காப்பதனாலேயே அந்த நெல்லும் நீரும் நிலைபெறுதலால் அவற்றை மறுத்து மன்னனையே உலகிற்கு உயிர் என்கின்றனர்.

**நிலையாமை கருத்து**

"பல்சான்றீரே! பல்சான்றீரே!
கயல்முன் அன்ன நரைமுதிர் திரைவுள்
பயனின் மூப்பின், பல சான்றீரே!"

நிலையாமை என்பது இவ்வுலகில் இல்லை. அனைத்து உயிர்களுக்கும் முதுமை உண்டு பயனின் இறுதியில் முதிர்வு. இதே கருத்தை மணிமேகலையில்,

"பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இது"

என்னும் பகுதி எடுத்துரைக்கின்றது.

**நிறைவுரை**

மேற்கண்ட வகையில் ஆராய்யப்பட்ட கருத்துகள் ஆனது மூவேந்தரும், குறுநில மன்னரும், கடையெழு வள்ளலும் நிலக்கிழாரும்,

படைத்தலைவரும் புறநானூற்றில் பாட்டுடைத் தலைவராகியுள்ளனர். புறநானூற்றில் வீரமே அடிப்படையான பாடுபொருள். அவற்றிலிருந்து கொடைத் தன்மையும் அறக்கருத்துக்களும் தொகுத்துள்ளனர்.

❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்